## 11. உண்மையான நட்பு.

இரண்டு கொக்குகளும் ஒரு ஆமையும் உண்மையான நண்பர்களாக வாழ்ந்தன.
குளத்தில் அவர்கள் விளையாடுவதும், பேசுவதும், மீன் பிடிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்!
கோடைக் காலம் ஆரம்பம் ஆனது.
குளத்தில் தண்ணீர் வற்றத் தொடங்கியது.
குளத்தில் வாழும் மீன்கள், ஆமைகள், தவளைகள், நண்டுகள் என்ன செய்வது என்று புரியாமல் வருந்தின.
கொக்குகளும் வேறு பல இடங்களுக்குச் சென்று தண்ணீர் உள்ள இடம் தேடின.
கடைசியில் வெகு தொலைவில் ஒரு பெரிய ஏரி இருப்பது தெரிய வந்தது.
"சரி அங்கே எப்படித் தன் ஆமை நண்பனை அழைத்துச் செல்வது?" கொக்குகள் யோசித்தன.
ஒரு குச்சியைக் கொக்குகள் பிடித்துக் கொள்ள, ஆமை வாயால் குச்சியைக் கவ்விக் கொள்ள வேண்டும்.
கொக்குகள் பறக்கும், ஏரி வந்ததும் ஆமையைத் தண்ணீருக்குள் விட்டுவிடும்
இது தான் திட்டம்!
திட்டத்தின் படி ஆமையும் வேறு ஏரிக்குச் சென்றது.
அன்று இரவு ஆமைக்குத் தூக்கமே வரவில்லை!
"நான் மட்டும் பிழைத்தால் போதுமா? அக்குளத்தில் எத்தனை பேர் தவிக்கப் போகிறார்கள்?" என்று அன்புடனும் கருணையுடனும் வருந்தியது.
தன் கவலையைக் கொக்குகளிடம் சொன்னது.
மறு நாள் கொக்குகள் பல கொக்குகளை அழைத்து வந்தன.
ஆமையை எப்படிக் காப்பற்றினவோ அதைப் போலவே குளத்தில் உள்ள பலரையும் அவை காப்பாற்றின.
எல்லோரும் ஏரியில் மிக்க சந்தோஷத்துடன் வாழ்ந்தன.